OS 110/2018

வா.சா. 1 கருணாமூர்த்தி த/பெ பரசுராமன்

நாள் 30.01.2025

குறுக்கு விசாரணை

1. நான் பட்டு சேலை வியாபாரம் செய்து வருகிறேன். மேலும் விவசாயமும் செய்து வருகிறேன். நான் பட்டு சேலை வியாபாரம் செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளேன். நான் வருடாவருடம் வருமான வரி செலுத்தி வருகிறேன்.

2. தாவாவில் மேடோவர் எந்த தேதியில் செய்யப்பட்டது என்றால் 27.10.2017 அன்று செய்யப்பட்டது. மேடோவர் செய்து தரும் போது இந்துமதி என்னிடம் என்ன தெரிவித்தார் என்றால் தன்னால் நீதிமன்றத்திற்கு வரமுடியாது என்றும் அதனால் முழுதொகையையும் அவரிடம் கொடுத்துவிடும் படியும் பின்னர் தாவா தொகையை பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் படியும் இந்துமதி தெரிவித்தார்.

3. தாவா அடமான பத்திரம் 2006 ம் வருடத்தில் இருந்து மேடோவர் செய்யப்பட்ட 2017ம் வருடம் வரையில் 11 வருடங்கள் இந்துமதி பெயரில் தான் இருந்தது என்றும் அந்த இடைப்பட்ட காலகட்டத்தில் இந்துமதியிடம் பிரதிவாதி வட்டி தொகையாக எவ்வளவு செலுத்தியுள்ளார் என்ற விவரத்தை தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் பிரதிவாதி வட்டி தொகை எதுவும் கொடுக்கவில்லை அதனால் சொல்லவில்லை.

4. மேற்சொன்ன 11 வருட காலகட்டத்தில் அடமான தொகை சம்மந்தமாக இந்துமதி பிரதிவாதியை எத்தனை முறை சந்தித்து பணத்தை கேட்டார் என்றும் அல்லது பிரதிவாதி இந்துமதியை சந்தித்து வட்டி செலுத்தினாரா என்பது பற்றியும் எனக்கு விவரம் எதுவும் தெரியுமா என்றால் 2017ம் ஆண்டு வா.சா.ஆ3 முன்னிலைக்கு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். ஆனால் அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிட்டார்.

5. வா.சா.ஆ1 அடமான பத்திரத்தில் பிரதி மாதம் ரூ.2/- வட்டியாக செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனறால் சரிதான். அவ்வாறு அடமான பத்திரம் எழுதப்பட்டு 11 வருடங்கள் வரை இந்துமதி வா.சா.ஆ3 அறிவிப்பு அனுப்பும் வரையில் வட்டி செலுத்தவில்லை என்பது குறித்து பிரதிவாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற காரணத்தினால் தான் அந்த 11 வருட காலகட்டத்தில் பிரதிவாதி முறையாக வட்டி செலுத்தி வந்தார் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

6. எனக்கு பிரதிவாதியின் கணவர் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் வேலூரில் காங்கேயன் காஸ் ஏஜென்சி நடத்தி வருகிறேன் என்றும் அதன் மூலமாக பிரதிவாதியின் கணவர் எனக்கு பழக்கம் என்று சொன்னால் காஸ் ஏஜென்சி நடத்தி வருவது உண்மை ஆனால் பிரதிவாதியின் கணவர் எனக்கு பழக்கம் என்று சொல்வது தவறு ஆகும். நான் சொல்வது பொய் என்றும் பிரதிவாதியின் கணவர் கமலநாதன் ஆரணி கூட்டுறவு சங்கத்தில் மேனேஜர் ஆக 2014 வரை இருந்தார் என்றும் அதன் மூலமாக பிரதிவாதியின் கணவரை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

7. 2017ம் ஆண்டில் ரூ.20,000/-ற்கு மேல் பணப்பரிவர்த்தனை செய்யும் போது வங்கி மூலமாக காசோலை அல்லது வரைவோலை மூலமாக தான் செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் மேடோவர் பத்திரம் எழுதும் போது இந்துமதிக்கு எவ்வளவு தொகை

கொடுத்தேன் என்றால் சுமார் ரூ.9,00,000/- கொடுத்தேன். அந்த தொகையை ரொக்கமாக தான் கொடுத்தேன்.

8. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ2 இந்துமதி எழுதி கொடுத்த மேடோவர் குறிப்பு என்றால் சரிதான். அந்த மேடோவர் குறிப்பில் எந்த இடத்திலாவது ரூ.9,00,000/- நான் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவாவில் மேடோவர் செய்யும் போது நான் இந்துமதிக்கு ரூ.9,00,000/- கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் மேடோவர் செய்யும் போது நான் இந்துமதிக்கு ரூ.9,00,000/- கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சுமாராக என்று சொல்லியுள்ளேன். ஆனால் ரூ.9,00,000/- என்று குறிப்பிட்டு சொல்லவில்லை.

9. இந்துமதி எனக்கு என்ன உறவு என்றால் என் மகள் ஆவார். இந்துமதி என் மகள் என்ற விவரத்தை தாவாவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. அவ்வாறு நான் ரூ.9,00,000/- கொடுத்து மேடோவர் பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்லாமல் தாவா தாக்கல் செய்துள்ளதாலும் இந்துமதி என் மகள் என்ற விவரத்தை சொல்லாமல் தாவா தாக்கல் செய்துள்ளதாலும் நான் இந்த நீதிமன்றத்தில் சுத்தமான கையுடன் அனுகவில்லை என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ2 மேடோவர் குறித்து பதிவு செய்யப்படாத குறிப்பு என்றால் சரிதான். நான் முறையாக வருமானவரி செலுத்தி வருபவர் என்பதாலும் ரூ.100/-க்கு மேல் ஏற்படும் பரிவர்த்தனைகள் அனைத்தும் சட்டப்படி பதிவு செய்யப்படவேண்டும் என்பது தெரிந்திருந்தும் வா.சா.ஆ2 மேடோவர் குறித்து பதிவு செய்யப்படாமல் பெற்றுக்கொண்டதால் தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேடோவர் பெற்று அதன் பிறகு நான் பிரதிவாதியை பணத்தை கொடுக்கும்படி எத்தனை முறை கேட்டேன் என்றால் சுமார் 3 மாதங்கள் வரை கேட்டிருப்பேன். அதன் பிறகு தான் வா.சா.ஆ5 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

11. அடமான பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டு 11 வருட காலம் வரையில் பிரதிவாதியின் அவரது கணவரும் முறையாக தவறாமல் வட்டி செலுத்தி வந்தார்கள் என்றும் 2016 ம் ஆண்டில் பிரதிவாதியின் கணவருக்கு வேலை போய்விட்ட பிறகு தான் எனக்கோ அல்லது இந்துமதிக்கோ வட்டி செலுத்த இயலவில்லை என்றும் அதனால் தான் 11 வருட காலம் வரையில் பிரதிவாதி மீது நானோ அல்லது இந்துமதியோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி முறையாக வட்டி செலுத்தி வந்ததாலும் வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஆனால் வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பு பதிவு செய்யப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

12. இந்த தாவாவை அடமான பத்திரம் பதிவு செய்து பெற்றுள்ள இந்துமதி தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் பதிவு செய்யப்படாத வா.சா.ஆ2 மேடோவர் குறிப்பின் படி நான் தாக்கல் செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் ரூ.9,00,000/- கொடுத்து மேடோவர் பெற்றதை வருமான வரி செலுத்தும் போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் அதற்கான வருமானவரி கணக்கை நான் செலுத்த தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன்.